திரு. டி. மணி: இந்திய விவசாய ஆராய்ச்சிக் கழகத்திடமிருந்து ஒரு புது ஆராய்ச்சி நிலையம் அமைப்பதற்காக சில ஏற்பாடுகளை செய்கிற நேரத்தில் கடந்த ஆண்டு நவம்பர் மாதத்தில் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் குழித்துறை வந்தபோது அங்கு இன்னொரு இடத்தைக் குறிப்பிட்டு, புயூலிர் குறிச்சி கோட்டை அங்கு போதுமான இடம் இருக்கிறது என்றும் அப்பகுதியில் நல்ல தண்ணீர், மண் இருக்கின்றன என்றும் கூறி இருக்கிறோம். நாம் கேட்கிற பள்ளக்குளம் கிடைக்கவில்லை என்றால் இந்தப் பகுதியைத் தேர்ந்தெடுத்து அங்கே இந்த ஆராய்ச்சி நிலையத்தை நிறுவ அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: பரிசீலிக்கும்.

ஆராய்ச்சி மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ள அதிக மகசூல் தரும் நெல், கரும்பு ரகங்கள்.

*வினா எண் 89— திரு. இல. பலராமன்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாய ஆராய்ச்சி மூலம் 1979–1980, 1980–1981, 1981–1982-ம் ஆண்டில் அதிக மகசூல் தரும் சத்துள்ள நெல், கரும்பு கண்டுபிடிக்கப்பட்டதா?

(ஆ) ஆம் எனில் எந்தெந்த மாவட்டங்கள் இதனால் பயனடைந்துள்ளன?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: (அ) ஆம். 1979-80, 1980-81 மற்றும் 1981–82 ஆகிய ஆண்டுகளில் பத்து புதிய நெல் ரகங்களும், ஒரு கரும்பு ரகமும் கண்டுபிடிக்கப்பட்டன.

(ஆ) புதிய கண்டுபிடிப்பான 10 நெல் ரகங்கள் ஒவ்வொன்றும் சில சில மாவட்டங்களுக்கு ஏற்றவையாக அமைந்துள்ளன. பொதுவாக இந்த புதிய நெல் ரகங்களால் செங்கல்பட்டு, வடஆற்காடு, தென் ஆற்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி, தர்மபுரி ஆகிய மாவட்டங்கள் பயனடையும். இரு ரகங்கள் தமிழகமெங்கும் பயிரிட உகந்தது. புதிய கண்டுபிடிப்பான கரும்பு (கோ. க. 80.1) தென்ஆற்காடு, செங்கல்பட்டு மாவட்டங்களில் அதிக பயன் கொடுக்கக்கூடியவை.

திரு. இல. பலராமன்: பத்து புதிய நெல் ரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டதாகக் கூறினார்கள். அந்த பத்து புதிய ரகங்கள் எவை எவை? அவை மத்திய அரசின் ஆராய்ச்சி நிலையத்தினால் கண்டுபிடிக்கப்பட்டதா? அல்லது மாநில அரசின் ஆராய்ச்சி நிலையத்தினால் கண்டுபிடிக்கப்பட்டதா? கரும்பு எந்த ரகத்தைச் சேர்ந்தது? அது ஏக்கர் ஒன்றுக்கு என்ன விகிதம் இலாபம் தரகூடிய கரும்பாக இருக்கிறது என்ற விவரங்களை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

[1983 பிப்ரவரி 1]

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : இவை தமிழ்நாடு வேளாண்மைத் துறையால் வேளாண்மைப் பல்கலைக் கழக ஆராய்ச்சிக்கூடத்தில் கண்டுபிடிக்கப்பட்டவை. அவை, கோ. 41, 42, ஆடுதுறை 33, 34, 35, மதுரை 1, புதுவைப் பொன்னி, புனிதவதி, பையூர் 1, அம்பாசமுத்தரம் 15, ஆகியனவாகும். கரும்பு கோ. சு. 8001 அதிக சர்க்கரைச் சத்துள்ளது. இது தென் ஆற்காடு, செங்கல்பட்டு மாவட்டங்களில் முன்பருவத்தை யொட்டி அதிக விளைச்சல் கொடுக்கக்கூடியது.

திரு இல. பலராமன் : கரும்பு ஒரு ஏக்கருக்கு சராசரி எவ்வளவு விளைச்சல் தருகிறது? நெல்லில் இருந்து எவ்வளவு மகசூல் கிடைக்கும் என்ற விவரம் பற்றி அமைச்சர் அவர்களிடம் தகவல் இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : அதைப்பற்றிய தகவல் இல்லை.

(முற்பகல் 9-20)

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, தமிழக வேளாண்மைத் துறையின் ஆராய்ச்சி நிலையங்களிலே பணியாற்றக்கூடிய ஆராய்ச்சியாளர்கள் நம்முடைய நாட்டிலே மிகச் சிறப்பானவர்கள் என்று பெயர் பெற்றவர்கள். இந்த ஆராய்ச்சியாளர்களுக்கு இருக்கக்கூடிய குறைகளைப் பற்றி அமைச்சர் அவர்கள் அறிவார்கள். அந்தக் குறைகளைத் தீர்ப்பதற்கு இதுவரை என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆராய்ச்சிப் பண்ணையிலிருந்து ஆராய்ச்சியாளர்களிடம் போனால் எப்படி முடிப்பது ? மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

திரு. செ. இராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக கொண்டுவரப்பட்ட கரும்பு ரகங்கள் 8001, 671 ஆகிய ரகங்களில் சர்க்கரை பிடிப்புச் சத்துமட்டும் அதிகமாக இருக்கிறது. ஆனால், உற்பத்தி செய்கிற விவசாயிக்கு அதிகமான எடையில்லாத அளவுக்கு எடை குறைவாக இருக்கிறது. அப்படி விவசாயிகள் நஷ்டப்படுவதை ஈடுகட்டுகிற வகையில் விலை கொடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இந்தக் குறையை நிவர்த்தி செய்யத்தக்க அளவுக்குப் புதிய ரகத்தைக் கண்டுபிடிக்க ஆராய்ச்சித் துறை முயற்சி செய்யும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே தற்போது கடுமையான வறட்சி நிலவிக் கொண்டிருக்கிறது. தண்ணீர் பற்றாக்குறை என்பது எப்பொழுதும் நிரந்தரமாக இருந்து கொண்டிருக்கிறது. ஆகயினாலே, இப்பொழுது புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட விதை ரகங்கள், தண்ணீரை குறைவாகப் பாசனம் செய்து, அதன் மூலமாகப் பயன்படுகின்ற ரகங்களாக இருக்கின்றனவா? அல்லது மொத்தம் உற்பத்தி செய்யும் நாட்கள் குறைந்து அதிக மகசூல் வருகின்ற அளவுக்கு அந்த முயற்சி ஏதேனும் இதிலே கடைப்பிடிக்கப்படுகிறதா? அந்த விவரம் இருந்தால் தருவீர்களா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இப்பொழுது ஐ. ஆர். 50 என்ற நெல் ரகத்தை, வறட்சி தாங்கக்கூடிய, ஓரளவு தண்ணீர் குறைவாக இருந்தலே போதும். குறைந்த வயதுடையது என்கிற வகையிலே பரிந்துரை செய்திருக்கிறோம்.

பாபநாசம் மேல் அணைச்சாலையில் மேற்கொள்ளப்பட்ட சீரமைப்புப் பணிகள்.

* வினா எண் 90—திரு பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் தொகுதியில் உள்ள மேல்பாபநாசம் அணைசாலையில் கி.மீ. 10 முதல் கி.மீ. 24 வரையில் வெள்ளப் பாழ் சீரமைப்புப் பணியின்கீழ் அணைப்புத் தளம் கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் இது பற்றிய விவரம் என்ன?

(இ) திட்ட மதிப்பீடு எவ்வளவு?

(ஈ) வேலை எப்பொழுது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : விடை (அ, ஆ, இ, மற்றும் ஈ) 1979 அம் ஆண்டு நவம்பர் மாத வெள்ள நிவாரணத் திட்டத்தில் பாபநாசம் மேல் அணை சாலையில் சுமார் ரூ. 2.00 இலட்சம் மதிப்பீட்டில் வெள்ள நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. வெள்ள நிவாரணத்திற்கான மதிப்பீட்டில் தடுப்பு வேலைகள்உடனடியாக தேவைப்பட்ட அளவிற்கு போடப்பட்டிருக்கின்றன. ரூ. 2 லட்சம் செலவில் நிவாரண வேலைகள் யாவும் செய்யப்பட்டு முடிக்கப்பட்டுவிட்டன.

திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, தேவைப்பட்ட அளவுக்கு வேலைகள் கொடுக்கப்படுகின்றன என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். தேவைப்பட்ட அளவுக்குப் பூராவும் வேலைகள் முடிவடையவில்லை